இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,410, NOVEMBER 11, 1910.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS

[Notification relating to postponement of Land Sales, Trincomalee District.]

1910 ம் ஆண்டு ஐப்பசிமாதம் 13 ந் திகதிக்கு திரிகோணமலைக் கச்சேரியில் நடைபெற நியமித்திருந்த காணிவிற்பனவு வருகிற மார்கழிமாதம் 1 ந் திகதி வியாழக்கிழமை நடைபெறுமென் றித்தா லறிவிக்கப்படுகிறது.

உத்தமனுர் கட்டளைப்படி,

இராசாங்க லிகிதர் கந்தோர்,
கொழும்பு, 1910 ம் ௵ கார்த்திகைமீ 2 ந் உ.

எச். எல். கிருவ்போர்டு,
இராசாங்க லிகிதர்.

---

[Regulations under " The Small Towns Sanitary Ordinances, 1892 to 1909," made by Sanitary Board, Matale.]

தீன்கடைகளையும் தேய் கோப்பிக் கடைகளையும்பற்றிய துணைப்பிரமாணங்கள்.

1. தீன் அல்லது தேய் கோப்பிக் கடைகளிலுள்ள கருவிகள், தட்டுமுட்டுச் சாமான்கள், அல்லது அங்கே பாவிக்கப்படும் பதார்த்தங்களெல்லாம் சுத்தமாய் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

2. மேற்சொல்லிய கடைகளின் சுவர்கள் வச்சிரத்துலமாக சாந்து பூசப்பட்டும் சுண்ணும்பால் வெள்ளையடிக்கப்பட்டும், அறைகளும் நல்ல வெளிச்சமும் காற்றுமுள்ளவையுமா யிருக்கவேண்டும்.

3. இக்கடைகளில் அல்லது அவைகளைச் சுற்றிய விடங்களிலிருக்கும் குப்பை, அழுக்கு முதலியவை யெல்லாம் நாளொன்றுக்கு இருமுறை பெருக்கித் தள்ளப்பட வேண்டும்.

4. இக்கடைகளில் தொற்று நோயாளராவது அல்லது அருவருப்புள்ள நோயாளிகளாவது, அப்படி நோயாளரைச் சிறுது நேரத்துக்கு முன்பதாகப் பார்த்தவராவது குழித்துச் சரீரம் கழுவாதவர்களாவது அசுத்தர்களாவது வேலை செய்யாதிருத்தல் வேண்டும்.

5. இக்கடைகளில் பாவிக்கப்படும் சீனி வாயகண்டதும் கண்ணடி மூடி போடப்பட்டதுமான போத்தல்களில் வைத்திருக்கப்பட வேண்டும்.

6. விற்பனவுக்காக வைக்கப்பட்ட உறட்டிகளும் மற்றும் சீனிசேர்ந்த பணியாரங்களும் இலையான் முட்டாதபடி கண்ணடியால் மூடப்பட்ட ஏதனங்களில் வைத்திருக்கப்படவேண்டும். இவ்வேதனங்கள் நல்ல துப்பரவாய் வைத்திருக்கப்பட வேண்டும்.

7. வடித்து-மிஞ்சிய தேய் கோப்பி பால் அல்லது மிஞ்சிய தீன் அல்லது குசனி ஊத்தைகள் நிலத்தில் வீசப்படாமல் நல்ல ஏதனத்தில் வைக்கப்பட்டு நாள்தோறும் அகற்றப்பட வேண்டும்.

8. இத்துணைப் பிரமாணங்கள் அடங்கிய காகிதம் சட்டம்போடப்பட்டு மேற்சொல்லிய தீன் தேய் கோப்பிக் கடைகள் ஒவ்வொன்றிலும் ஓர் பிரசித்தமான இடத்தில் தூக்கப்பட்டிருக்க வேண்டும்.

கோதுமைஅப்பஞ் சுடுமிடங்களைப்பற்றிய துணைப்பிரமாணங்கள்.

1. கோதுமைஅப்பஞ் சுடுமிடம் நல்ல வெளிச்சமுங் காற்றுமுள்ளதா யிருத்தல் வேண்டும். அவைகளின் சுவர்கள் வச்சிரத்துலமாகவும் சாந்துபூசப்பட்டு வருடமொன்றுக்கு நாலு தரமாகுதல் சுண்ணும்பால் வெள்ளையடிக்கப்பட்டும், நிலஞ் சீமெந்துபூசப்பட்டும், போதியளவு கான்களும் கட்டப்பட்டு மிருக்கவேண்டும்.

2. கக்கூஸ்முதலிய குழிகளிலிருந்து 30 அடி தூரத்துக்குள், யாதாமொரு கோதுமைஅப்பஞ் சுடுமிடம் இருக்கப்படாது. அதுவுமல்லாமல் கெட்ட நாற்றம் வீசும்பொழுது அன்னுற்றம் பிடிக்கக்கூடிய இடத்திலு மிருக்கப்படாது.

3. கோதுமைஅப்பஞ் சுடுகிற விடம் குடியிருக்கும் வீடாக அல்லது வேறு யாதாமொரு விதமாகப் பாவிக்கப்படக் கூடாது.

4. கோதுமைஅப்பஞ் சுடுமிடத்தில் உள்ள கருவிகள் தட்டுமுட்டுச் சாமான்கள் அல்லது பாவிக்கப்படும் பதார்த்தங்கள் எல்லாம் சுத்தமாய் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. கோதுமைஅப்பஞ் சுடுவதற்குப் பாவிக்கப்படும் மா, தண்ணீர், மற்றும் பதார்த்தங்க ளெல்லாம் நல்லவையும் சுகத்துக்கேற்றவையுமா யிருக்கவேண்டும். இன்னும் நிலத்திலிருந்து 3 அடி உயரத்துக்குமேல் ஓர் தட்டில் மா வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

6. இவ்விடங்களிலுள்ள குப்பை, அழுக்கு முதலியவை யெல்லாம் நாளொன்றுக்கு ஒரு தரமாகுதல் பெருக்கித் தள்ளப்பட்டும், அழுக்கு நீர்பாயும் வாய்க்கால்க ளெல்லாம் நல்லாய்க் கழுவப்பட்டு மிருக்கவேண்டும்.

7. அப்பஞ்சுடுமிடத்தில் தொற்றுநோயாளராவது அல்லது, அப்படி நோயாளரைச் சிறிது நேரத்துக்கு முன்பதாகப் பார்த்தவராவது குழித்துச் சரீரம் கழுவாதவர்களாவது அசுத்தர்களாவது வேலைசெய்யாதிருத்தல் வேண்டும். மாப்பிசைபவர்கள் எல்லாரும் வெண்ணிறமான முன்தாங்கிகளை அணிந்திருத்தல் வேண்டும்.

8. அப்பஞ்சுடப்படும் இட மொவ்வொன்றும் அவைகளை நடத்தும் வகையும் அங்கு நடைபெறும் தொழிலும் எப்போதும் உப அரசாட்சி ஏசண்டருடைய அல்லது அவரின் உத்தரவுபெற்றவர்களுடைய பரிசோதனைக் குட்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

9. கோதுமை அப்பஞ்சுடுமிடம் ஒவ்வொன்றும் உப அரசாட்சி ஏசண்டருடைய அனுப்பதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளவேண்டும். இப்பத்திரம் கொடுபட்ட வருட மார்கழிமாதம் 31 ந் தேதிவரையும் பெலமுள்ள தாயிருக்கும். மேற்சொல்லிய துணைப்பிரமாணங்களில் எவையாகுதல் அமைந்து நடைபெறுவிட்டால், கொடுபட்ட அனுமதிப்பத்திரத்தை அழிக்க உப அரசாட்சி ஏசண்டருக்குத் தத்துவமுண்டு. தற்காலம் நடைபெறும் ஒவ்வொரு கோதுமைஅப்பஞ் சுடு

மிடமும் மேற்சொல்லிய விதமான ஓர் அனுமதிப்பத்திரத்தை, இத்துணைச்சட்டங்கள் பிரசித்தப்படுத்தியபின் ஒரு மாதத் தவணைக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

10. இத்துணைப்பிரமாணங்கள் அடங்கிய ஓர் காகிதம் சட்டம்போடப்பட்டு ஒவ்வொரு அப்பஞ்சுடுமிடத்திலும் ஓர் பிரசித்தமான இடத்தில் தூக்கப்பட்டிருக்க வேண்டும்.

இறைச்சிக் கடையைப்பற்றிய துணைப்பிரமாணங்கள்.

1. ஒவ்வொரு இறைச்சிக்கடையும் நல்ல வெளிச்சமும் காற்றுமுள்ளதா யிருத்தல்வேண்டும். அவைகளின் சுவர்கள் வச்சிரத்துலமாகவும் சாந்துபூசப்பட்டும் வருடமொன்றுக்கு நாலுதரமாகுதல் சுண்ணும்பால் வெள்ளையடிக்கப்பட்டு மிருக்கவேண்டும்.

2. இறைச்சி வைத்திருக்கு மொவ்வொரு அறையும் சுத்தமாய் வைத்திருக்கப்படவேண்டும்.

3. இறைச்சிக்கடையில் பாவிக்கப்படும் ஒவ்வொரு மேசையும் துத்துநாகத்தால் மூடப்பட்டிருக்கவேண்டும். மேசையும் இறைச்சிதறிக்கும் மரத்துண்டும் ஆயுதங்களும் சுத்தமாய் வைத்திருக்கப்படவேண்டும். பாவித்தபின் இவைகள் தண்ணீரால் கழுவப்பட்டு உரமான துடைப்பத்தால் தேய்க்கப்படவேண்டும். இறைச்சிதூக்கும் கொளுக்கிகளெல்லாம் கறள்இல்லாமல் உரைஞ்சப்படவேண்டும்.

4. எச்சம், விற்பனவுக்குக் கூடாதஇறைச்சி, உச்சிட்டம் முதலியன உடனே அகற்றப்படாவிட்டால், தமரிட்டதுத்துநாக மூடி உள்ளதும் துத்துநாகம் உள்ளிடப்பட்டதுமான பெட்டியில் வைத்திருக்கப்படவேண்டும். மூடியின் தமருகள் இலையான் உட்செல்லக்கூடாத பருப்பமுடையனவா யிருத்தல்வேண்டும்.

5. இக்கடைகளில் அல்லது அவைகளைச்சுற்றிய விடங்களிலிருக்கும் குப்பை அழுக்கு முதலியவையெல்லாம் நாளொன்றுக்கு ஒரு முறையாகுதல் பெருக்கித்தள்ளப்பட்டும், அழுக்குநீர்பாயும் வாய்க்கால்களெல்லாம் நல்லாய்க் கழுவப்பட்டு மிருக்கவேண்டும்.

6. இறைச்சிக்கடையில் தொற்றுநோயாளராவது அல்லது அருவருப்புள்ள நோயாளிகளாவது, அப்படி நோயாளரைச் சிறிது நேரத்துக்கு முன்பதாகப் பார்த்தவராவது குழித்துச் சரீரம் கழுவாதவர்களாவது அசுத்தர்களாவது வேலைசெய்யாதிருத்தல் வேண்டும்.

7. தள்ளப்படும் உருப்படிகள் போடுவதற்காக தகரமுதலிய உலோகத்தினால் செய்யப்பட்ட பாத்திரம் ஒன்று ஒவ்வொரு இறைச்சிக்கடைக்காரனும் வைத்திருக்கவேண்டும்.

8. இறைச்சிக்கடை ஒவ்வொன்றும் அவைகளை நடத்தும்வகையும் அங்கு நடைபெறும் தொழிலும் எப்பொதும் உப அரசாட்சி ஏசண்டருடைய அல்லது அவரின் உத்தரவு பெற்றவர்களுடைய பரிசோதனைக் குட்பட்டவையாக இருத்தல்வேண்டும்.

9. இறைச்சிக்கடை ஒவ்வொன்றும் உப அரசாட்சி ஏசண்டருடைய அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இப்பத்திரம் கொடுபட்ட வருட மார்கழிமாதம் 31 ந் தேதிவரையும் பெலமுள்ளதாயிருக்கும். மேற்சொல்லிய துணைப்பிரமாணங்களில் எவையாகுதல் அமைந்து நடைபெறாவிட்டால், கொடுபட்ட அனுமதிப்பத்திரத்தை அழிக்க உப அரசாட்சி ஏசண்டருக்குத் தத்துவமுண்டு. தற்காலம் நடைபெறும் ஒவ்வொரு இறைச்சிக்கடையும் மேற்சொல்லியவிதமான ஓர் அனுமதிப்பத்திரத்தை, இத்துணைச்சட்டங்கள் பிரசித்தப்படுத்தியதின்பின் ஒரு மாதத் தவணைக்குள் பெற்றுக்கொள்ளவேண்டும்.

10. இத்துணைப்பிரமாணங்கள் அடங்கிய ஓர் காகிதம் சட்டம்போடப்பட்டு ஒவ்வொரு இறைச்சிக்கடையிலும் ஓர் பிரசித்தமான இடத்தில் தூக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மீன் கடையைப்பற்றிய துணைப்பிரமாணங்கள்.

1. ஒவ்வொரு மீன்கடையும் நல்ல வெளிச்சமும் காற்றுமுள்ளதா யிருத்தல்வேண்டும். அவைகளின் சுவர்கள் வச்சிரத்துலமாகவும் சாந்து பூசப்பட்டும் வருடமொன்றுக்கு நாலுதரமாகுதல் சுண்ணும்பால் வெள்ளையடிக்கப்பட்டு மிருக்கவேண்டும். நிலஞ் சீமெந்து பூசப்பட்டு கல்லும் சீமேந்துஞ் சேர்த்துக்கட்டிய வாய்க்காலால் தண்ணீர்பாய்ந்து ஓர் ஏதனத்துள் விழக்கூடிய மாதிரியான சரிவுள்ளதுமானதா யிருத்தல்வேண்டும். வாய்க்கால்களும் ஏதனமும் ஒவ்வொருநாளும் இரண்டுதரமாகுதல் நாற்றம்போக்கும் மருந்தினால் கழுவப்படவேண்டும். ஏதனத்தில் ஊத்தைநீர் முட்டி வழிய விடவும்படாது. கடை எப்போதும் துப்பரவாயும் இரத்தம் அல்லது வேறு அழுக்கின் அடையாளமில்லாமலு மிருத்தல்வேண்டும்.

2. மேற்சொல்லிய விதமான வாய்க்கால்கள் இல்லாமல் தண்ணீர்பாய்ந்து ஏதனத்துக்குள் விழும்படியாக வளைத்த துத்துநாகத் தகட்டை மீன்விற்பவன் பாவித்துக்கொள்ளலாம்.

3. மீன்கடையில் பாவிக்கப்படும் ஒவ்வொரு மேசையும் துத்துநாகத்தால் மூடப்பட்டிருக்கவேண்டும். மேசையும் மீன்வெட்டும் மரத்துண்டும் ஆயுதங்களும் சுத்தமாய் வைத்திருக்கப்பட வேண்டும். பாவித்தபின் இவைகள் தண்ணீரால் கழுவப்பட்டு உரமான துடைப்பத்தால் தேய்க்கப்பட வேண்டும். மீன்தூக்கும் கொளுக்கிகளும் கறள் இல்லாமல் உரைஞ்சப்பட வேண்டும்.

4. மீன்வைக்கும் கூடைகள் ஒவ்வொரு நாளும் கழுவப்பட்டு வெய்யிலும் காற்றும்படும்படி ஓர் தட்டில் வைக்கப்படவேண்டும். இவைகள் மீன்கடைகளுள் வைக்கப்படக் கூடாது.

5. தள்ளப்படும் உருப்படிகள் போட்டுவைப்பதற்கு தகரமுதலிய உலோகத்தினால் செய்யப்பட்ட பாத்திரம் ஒன்று ஒவ்வொரு மீன்கடைக்காரனும் வைத்திருக்கவேண்டும்.

6. மீன்கடைகளில் அல்லது அவைகளைச்சுற்றிய விடங்களிலிருக்கும் குப்பை, அழுக்கு முதலியவை யெல்லாம் நாளொன்றுக்கு ஒருதரமாகுதல் பெருக்கித் தள்ளப்பட்டும் அழுக்குநீர்பாயும் வாய்க்கால்களெல்லாம் நல்லாய்க் கழுவப்பட்டு மிருக்கவேண்டும்.

7. மீன்கடையில் தொற்று நோயாளராவது அல்லது அருவருப்புள்ள நோயாளிகளாவது, அப்படி நோயாளரைச் சிறிது நேரத்துக்கு முன்பதாகப் பார்த்தவராவது குழித்துச் சரீரம் கழுவாதவர்களாவது அசுத்தர்களாவது வேலைசெய்யாதிருத்தல் வேண்டும்.

8. மீன்கடை ஒவ்வொன்றும் அவைகளை நடத்தும் வகையும் அங்கு நடைபெறும் தொழிலும் எப்போதும் உப அரசாட்சி ஏசண்டருடைய அல்லது அவரின் உத்தரவு பெற்றவர்களுடைய பரிசோதனைக் குட்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

9. மீன்கடை ஒவ்வொன்றும் உப அரசாட்சி ஏசண்டருடைய அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும். இப்பத்திரம் கொடுபட்ட வருட மார்கழி மாதம் 31 ந் தேதிவரையும் பெலமுள்ளதாயிருக்கும். மேற்சொல்லிய துணைப்பிரமாணங்களில் எவையாகுதல் அமைந்து நடைபெறாவிட்டால், கொடுபட்ட அனுமதிப்பத்திரத்தை அழிக்க உபஅரசாட்சி ஏசண்டருக்குத் தத்துவமுண்டு. தற்காலம் நடைபெறும் ஒவ்வொரு மீன்கடையும் மேற்சொல்லிய விதமான ஓர் அனுமதிப்பத்திரத்தை, இத்துணைச்சட்டங்கள் பிரசித்தப்படுத்தியபின் ஒரு மாதத் தவணைக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

10. இத்துணைப்பிரமாணங்கள் அடங்கிய ஓர் காகிதம் சட்டம்போடப்பட்டு ஒவ்வொரு மீன்கடையிலும் ஓர் பிரசித்தமான இடத்தில் தூக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மிருகங்கள் வைத்திருப்பதைப்பற்றிய துணைப்பிரமாணம்.

1. குதிரை, கோவேறுகழுதை, கழுதை, மாடு, எருமை, வெள்ளாடு, செம்மறியாடு, பன்றி முதலிய மிருகங்களை வசிக்கும் வீட்டில், வீட்டுவிறுந்தையில் அல்லது வீட்டுடன் சேர்ந்த கொட்டிலில் அல்லது மடுவத்தில் கட்டிவைத்திருத்தல் கூடாது.

பொதுப் பிரமாணங்கள்.

உப அரசாட்சி ஏசண்டர் அல்லது அவரின் உத்தரவுபெற்றவர்கள் பின்வரும் கட்டளைகளை எக்காலத்திலும் உண்டாக்கிக்கொள்ளலாம்.

(a) யாதாமொரு வீடு இருப்பிடம், கோவில், சபாமண்டபம் அல்லது வேறுவிதமான கட்டடங்கள் முழுவதையும் அல்லது அதன் ஓர் பகுதியை உள்ளும் புறமும் சுண்ணம்பால் வெள்ளையடிக்கவும், போதிய காற்றுப் போகவர இடம்விடவும் தூர்மணமகற்றும் மருந்தினால் அல்லது வேறு மாதிரியாய்த் துப்பரவுபண்ணவும்.

(b) தேவையென்று காணப்படுமிடத்தில் கக்கூஸ் கட்டவும்.

(c) கக்கூஸ்களையும் தூர்மணங் கொடுக்கும் வாய்க்கால்களையும் காணிக்காரர் மூடவும் அவைகளுக்குப் பதிலாய் வேறு கட்டவும்.

(d) வளவுகளைத் துப்பரவாக்கவும் அவைகளிலுள்ள ஊத்தைகளை எரிக்கவும்.

(e) வீட்டு வேலிகளை 6 அடி உயரத்துக்கு மேற்படாமல் வைக்கவும் வெளியில் தூங்கும் மரக்கொப்புகளையும் இலைகுழைகளையும் அறுக்கவும். இவ்விதமான கட்டளைகளுக்கு காணிகளின் சொந்தக்காரர் அல்லது அவைகளில் வசிப்பவர்கள் உடனே அமைந்து நடத்தல் வேண்டும்.

(f) வளவுக்குள் அல்லது வீட்டுக்குக்கிட்ட விருக்கும் பள்ளங்கள் தண்ணீர் தங்கிநில்லாதபடி மூடப்பட்டு வாய்க்கால்களும் கட்டப்பட வேண்டும்.

---

## LAND SALES.

### காணி விற்பனவுகள்.

No. 1,258, E. P.—1910 ம் ஆண்டு மார்கழிமாதம் 14 ந் திகதியாகிய புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிழக்குமாகாணத்து கவண்மேந்து ஏசென்றவர்கள் தனது ஆபிசில், இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற் கூறி விற்பார். காணித்துண்டுகள், கிழக்கு மாகாணத்து மட்டக்களப்பு டிஸ்திறிக்கி லிருக்கின்றன.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. ரூ. ப. | ஏக்கரொன்றுக்கு தீர்ப்புவிலை ரூ. |
|---|---|---|---|---|---|
| | | பிளான் இல. 4,115. மண்முனைப்பற்று வடபகுதி. உரித்தாவி—கட்டிப்பிடித்தது. | | | |
| 94916 | சொருவாமுனை | பி. சின்னப்பிள்ளை | சேனை | 4 1 34 | 17·50 |
| | | படம் 3,597. உரித்தாவி—முடி. | | | |
| 92734 | ஷை | ப. கந்தப்பனு மறுபேரும் | தோட்டச்செய்கைக்கேற்ற பூமி | 5 0 18 | 30 |
| | | படம் 4,169. எருவூர்பற்று. உரித்தாவி—முடி. | | | |
| 131 | எருவூர் (ஐயன் கேணி) | ப. முகையதீன்வாவாப் பரிகாரி | சேனை | 1 1 25 | 16 |
| | | | உரித்தாவி—கட்டிப்பிடித்தது. | | |
| 132 | ஷை | ஷை | தோட்டம் | 0 2 27 | 27 |
| | | படம் 3,347. சம்மாந்துறைப்பற்று. உரித்தாவி—முடி. | | | |
| 90392 | சவளக்கடை | பொதுவிற்பனவு | சோலைகாடு | 9 3 34 | 16 |
| 90394 | ஷை | ஷை | ஷை | 7 3 14 | 16 |
| 90398 | ஷை | ஷை | ஷை | 9 3 6 | 18 |
| 90399 | ஷை | ஷை | ஷை | 9 3 24 | 17 |
| 90401 | ஷை | ஷை | ஷை | 11 0 28 | 16 |
| 90403 | ஷை | ஷை | ஷை | 9 1 10 | 16 |
| | | படம் 3,640. பாணமைப்பற்று. உரித்தாவி—முடி. | | | |
| 93081 | பொத்துவில் | பொதுவிற்பனவு | காடு | 0 3 37 | 15 |
| 93082 | ஷை | ஷை | ஷை | 0 3 37 | 15 |
| 93083 | ஷை | ஷை | ஷை | 0 3 37 | 15 |
| 93084 | ஷை | ஷை | ஷை | 0 3 37 | 15 |
| 93086 | ஷை | ஷை | ஷை | 1 0 12 | 15 |
| 93087 | ஷை | ஷை | ஷை | 0 3 28 | 15 |
| 93088 | ஷை | ஷை | ஷை | 0 3 28 | 15 |
| 93089 | ஷை | ஷை | ஷை | 0 3 28 | 15 |
| 93092 | ஷை | ஷை | ஷை | 1 0 14 | 15 |
| | | படம் 3,141. அகப்பற்று. உரித்தாவி—முடி. | | | |
| 88531 | பங்குடாவெளி | மூ. தொந்தியாலெவ்வைப் போடி | காடு | 27 3 20 | 15 |
| | | படம் 3,089. எருவூர்பற்று. உரித்தாவி—முடி. | | | |
| 88267 | கிற்றுண்டி | கா. கந்தப்பன் | வயல் | 3 3 10 | 15 |
| | | படம் 3,810. போரதீவுப்பற்று. உரித்தாவி—முடி. | | | |
| 93708 | களிமடு | க. கணவதிப்பிள்ளை | வேளாண்மைக்கேற்ற காடு | 1 0 15 | 15 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விஸ்தாரங்களையும் விற்பனவின் கொந்திசுகளைப்பற்றியும் மட்டக்களப்பு அரசாட்சி ஏசண்டுத் துரை யவர்களிடம் விசாரித்தறிந்துகொள்ளலாம்.

கலோனியல் சகிறுத்தார் ஆபிசில், கொழும்பில், 1910 ம் ஆண்டு ஐப்பசிமீ 27 ந் உ.

எச். எல். கிறவ்போர்டு, கலோனியல் சகிறுத்தாரின் வேலைபார்ப்பவர்.

---

No. 1,259, E. P.—1910 ம் ஆண்டு மார்கழிமாதம் 22 ந் திகதியாகிய வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிழக்கு மாகாணத்து கவண்மேந்து ஏசென்றவர்கள் தனது ஆபிசில் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம், ஏலத்திற்கூறி விற்பார். காணித்துண்டுகள், கிழக்கு மாகாணத்து மட்டக்களப்பு டிஸ்திறிக்கி லிருக்கின்றன.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. ரூ. ப. | தீர்ப்புவிலை ஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| | | பிளான் இல. 3,643. கோறளைப்பற்று. உரித்தாவி—முடி. | | | |
| 93132 | மாங்கேணி | வீ. கந்தவனமும் மறுபேரும் | துப்பரவுபண்ணிய பூமி | 0 0 38 | 15 |
| 93133 | ஷை | ஷை | சோலைக்காடு | 5 0 6 | 17·50 |
| 93134 | ஷை | ஷை | ஷை | 34 3 7 | 18 |
| | | படம் 4,173 போரதீவுப்பற்று. உரித்தாவி—முடி. | | | |
| 188 | வக்கியெல | பொதுவிற்பனவு | பறட்டைக்காடு | 1 0 31 | 15 |
| 189 | ஷை | வனிக்காகவிடப்பட்ட பூமி | ஷை | 0 0 28 | — |

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | சேன்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ.ரூ. ப. | ஏககோன் தகுதிப்புவிலை ரூ. |
|---|---|---|---|---|---|
| 190 | வக்கில | மு. ஓ அகமதுலெவ்வை | பறட்டைக்காடு | 0 3 16 | 15 |
| 19[illegible] | டிை | நிருந்தாக்காசவிடப்பட்ட பூமி | டிை | 1 0 36 | — |
| | | படம் 3,439. உரித்தாளி—முடி. | | | |
| 92096 | போரதிவு | பொதுவிற்பனவு | காடு | 9 3 4 | 15 |
| | | உரித்தாளி—கூட்டிப்பிடித்தது. | | | |
| 92098 | டிை | வி. கணபதி | வேளாண்மை | 6 2 28 | 15 |
| 92100 | டிை | 2,996 ம் நொம்பர் படத்தில் குறிக்கப்பட்ட 87,770 ம் நொம்பர் கண்டத்தி னுருத்தாளன் | டிை | 1 3 25 | 15 |
| | | படம் 2,154. விந்துனைப்பற்று. உரித்தாளி—முடி. | | | |
| *7108 | புல்லுமலை | க. அம்பலவாணர் | வேளாண்மைப்பூமி | 5 0 0 | 15 |
| *7109 | டிை | அ. நப்பியல் | டிை | 8 1 21 | 15 |

* நீர்வரி நிலுவைக்காக விற்று அரசாட்சி வாங்கி திரும்ப விற்பனவுக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விளம்பரங்களையும் விற்பனவின் கொந்தேசுகளைப்பற்றியும் மட்டக்களப்பு அரசாட்சி ஏசன்றுத்துரை யவர்களிடம் விசுவி யறிந்துகொள்ளலாம்.

கலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1910 ம் ஸு கார்த்திகைமீ 8 ந் உ.

எச். எல். கிறவ்போர்டு,
கலோனியல் சக்கிறத்தாரின் வேலைபார்ப்பவர்.

---

## LAND ACQUISITION NOTICES.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Galkissa, Colombo District.]

1876 ம் ஸு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கரையோரத்தில் ஓர் றெயில்பாதை போகிறதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 14,439. குறிச்சி—கல்கின்னை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| Z 7 | அப்போதிக்கறவத்தை | தென்னமரங்களும் 20 வருஷம் சென்ற ஓர் தென்னமரம் எல்லையில் நிற்கிற தோட்டம் | வில்லியம் சார்ள்ஸ் வக்கியன்ஸ் | 0 0 6·25 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸு-த்துக் காணி எடுத்துக்கொள்ளுதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிதப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவர்களுடைய காரியகாரர் மூலமாய் 1910 ம் ஸு மார்கழிமாசம் 6 ந் திகதியன்று 11 மணிக்கு காலமே கொழும்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1910 ம் ஸு கார்த்திகைமீ 1 ந் உ.

சீ. டீ. வைகோர்ஸ்,
அரசாட்சி ஏசண்டு.

---

[Dadalla, Galle District.]

1876 ம் ஸு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம், காலியில் தொற்று வியாதிக்காறருக்கான ஆசுப்பத்திரி என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 9,020. குறிச்சி—தடல்ல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| N 2 | வசலிக்கவத்த | தென்னந்தோட்டம் | எம். சவாறிஸ் விஜயரெட்ண | 5 0 12·75 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸு-த்துக் காணி எடுத்துக்கொள்ளுவதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிதப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவர்களுடைய காரியகாரர் மூலமாய் 1910 ம் ஸு மார்கழிமாசம் 7 ந் திகதியன்று பினனேரம் 2 மணிக்குக் காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம்சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலி கச்சேரி,
1910 ம் ஸு கார்த்திகைமீ 3 ந் உ.

சீ. எம். லசிங்டன்,
தென்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

[Yatanwala, Kegalla District.]

1876 ம் ஸு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் றாயன்வெலயில் ஓர் பாடசாலை தோட்டத்திற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 1,986. குறிச்சி—யற்றன்வல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| T 4 | உடுகெதறவத்தை | தென்னைமரங்களுள்ள தோட்டம் | றாயன்வெலயில் காலஞ்சென்றுபோன அப்துல்கரீம் உடையா ஆதனத்தின் உரிமைக்காறர் | 0 1 32 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்தாப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1910 ம் ௵ மார்கழி மாசம் 3 ந் தேதியிலன்று 1 மணிக்கு கேகாலைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடன்மைகளினது தன்மையையும் அவ்வுடன்மைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விபரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி,
1910 ம் ௵ ஐப்பசிமீ 30 ந் உ.

ஜே. கொண்ஹேய்,
அரசாட்சி உதவி ஏசெண்டு.

---

[Maniyangama, Kegalla District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பாடசாலைத் தோட்டத்துக்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 1,960. குறிச்சி—மாணியன்கம.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| P 3 | பீல்லகாவஹேன | தோட்டம் | மாணியன்கமவிலிருக்கும் பத்திரனகெலாகேடிங்கிரி மெனிக்காவும் புஞ்சல்லேகமுலலாகே அப்புகாமியும் | 0 3 0 |
| Q 3 | ஷை | ஷை | மாணியன்கம் விகாரையின் பொறுப்பாளி | 0 0 10 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்தாப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1910 ம் ௵ மார்கழி மாதம் 3 ந் திகதியிலன்று 1 மணிக்குக் கேகாலைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடன்மைகளினது தன்மையையும் அவ்வுடன்மைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விபரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி,
1910 ம் ௵ ஐப்பசிமீ 30 ந் உ.

ஜே. கொண்ஹேய்,
அரசாட்சி உதவி ஏசெண்டு.

---

[Tihawa, Hambantota District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் புதிதாய்க்கட்டப்படும் திஸ்ஸமகாராமை ஆஸ்பத்திரி என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 9,144. குறிச்சி—திஹாவை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| G 6 | தெபரவெவஹேன்கனத்த | ஹேன | என். டீ. பீ. குணவர்தன | 3 0 26 |
| H 6 | தெபரவெவ காமி | வளவுத்திடல் | ஷை | 0 3 15 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்தாப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1910 ம் ௵ நொவம்பர்மாதம் 12 ந் திகதியிலன்று பகல் 12 மணிக்கு அம்பாந்தோட்டையில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடன்மைகளினது தன்மையையும் அவ்வுடன்மைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும விபரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அம்பாந்தோட்டைக் கச்சேரி,
1910 ம் ௵ நவம்பர்மீ 1 ந் உ.

எல். என். ஹுல்வ்,
அரசாட்சி உதவி ஏசெண்டு.

---

[Halpe, Badulla District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஆண்பிள்ளை பிள்ளைகளின் பள்ளிக்கூடத்துக்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 36. குறிச்சி—ஹல்பே.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 131A | உடவத்த | பள்ளிக்கூடமும் காணியும் | புஞ்சிஹுல கமஹுல | 0 1 06·5 |
| 132B | பிடஹுவத்த | பள்ளிக்கூட நிலம் | ஈங்மெனிக்காவும் இன்னும் மற்றவரும் | 0 0 34 |
| 132C | ஷை | ஷை | முதியான்சேயும் இன்னும் மற்றவரும் | 0 0 0·5 |
| 136D | ஷை | ஷை | ஈங்மெனிக்காவும் இன்னும் மற்றவரும் | 0 0 0·1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்தாப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1910 ம் ௵ மார்கழிமாசம் 15 ந் திகதியிலன்று 12 மணிக்கு ஹல்பேயில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடன்மைகளினது தன்மையையும் அவ்வுடன்மைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விபரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1910 ம் ௵ நொவம்பர்மீ 5 ந் உ.

சி. ஆர். கம்பர்லாண்ட்,
அரசாட்சி ஏசெண்டு.

# PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT.

## உரிமைபெறும் யாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

### Hambantota Notice No. 3,922.

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடமைகயாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள், 1910ம் ஆண்டு (நவம்பர்) கார்த்திகைமீ 11 ந் தேதி அவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் சி. வீ. பிறெயின் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடமையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக் கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்தும்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

சி. வீ. பிறெயின்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சுட்டிய காணிகளின் விவரம்.

தென்மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திறிக்குக் கிறுவாப்பத்து மேற்கைச்சேர்ந்த கொறவின்ன என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் 210.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
| --- | --- | --- |
| 30A | கொடொல்பொத்தகேவத்தை | 0 0 26 |

எல்லைகளாவன: வடக்கு-முடி உரித்துப்பேசும் உஸ்வத்தேகேவீ ; கிழக்கு-முடி உரித்துப்பேசும் கட்டாடிகேறும்ப ; தெற்கு-முடியும் கொடிகங்காணங்கே தொன் கியதோரிசும் உரித்துப்பேசும் கொடொல்பொத்தகேவத்தை ; மேற்கு-முடி உரித்துப்பேசும் உஸ்வத்தேகேவீ.

II.—பிரதமபடம் 210.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
| --- | --- | --- |
| 30B | கொடொல்பொத்தகேவத்தை | 1 0 28 |

எல்லைகளாவன: வடக்கு-முடியும் கொடிகங்காணங்கே தொன் கியதோரிசும் உரித்துப்பேசும் கொடொல்பொத்தகேவத்தை ; கிழக்குந் தெற்கும் மேற்கும்-முடி உரித்துப்பேசும் தொடொல்பொத்தகேகேவீ.

III.—பிரதமபடம் 210.

| காணித்துண்டு | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
| --- | --- | --- |
| 32F | கட்டுகொரமேகேனேவத்தை | 1 3 24 |

எல்லைகளாவன: வடக்கு-விதாறணகே தொவான் உரித்துப்பேசும் திகபொத்தகேனேவத்தை, முடி உரித்தும்பேசும் கயுககேவீ ; கிழக்குந் தெற்கும்-முடி உரித்தும்பேசும் கயுககேவீ ; மேற்கு-முடி உரித்தும்பேசும் அம்பககேவீ.

IV.—பிரதமபடம் 210.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
| --- | --- | --- |
| 37G | தேனியகொறட்டுவேமகாவத்தை | 1 0 11 |

எல்லைகளாவன: வடக்கு-அமறகோன் திசாநாயககே அதுக்காமியும் மற்றவர்களும் உரித்தும்பேசும் தேனியே கொறட்டுவ அல்லது மகாவத்தை ; கிழக்கு-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட மகாறுப்பேகேவீ, முடியால் விற்கப்பட்ட மகாறுப்ப (263,137 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி) ; தெற்கும் மேற்கும்-திசாநாயககே அதுக்காமியும் மற்றவர்களும் உரித்தும்பேசும் மகாறுப்ப.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 1109 & 1110 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

Hambantota S. O. 66—1910.

---

### Kurunegala Notice No. 3,923.

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடமையாயினும் தங்களுக்குண்டென உரித்தும்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள், 1910 ம் ஆண்டு (நவம்பர்) கார்த்திகைமீ 11 ந் திகதி அவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவின் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடமையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்தும்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவின்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சுட்டிய காணியின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக்குக் கட்டுகம்பொல காத்பத்தில் மெதப்பத்துக்கோறளை மேற்கைச் சேர்ந்த மீகமுவ என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதியில் விவரித்தபடியே, 35 பேர்ச்சு விசாலமுடையதும் சாமானியமாய் பிரசித்தவேலைக் கந்தேயின் லங்காவுக் தோட்டமும என்னும் பெயரினுல் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டு வருவதும் 381 ம் பிரதமபடத்தில் 11 ந் துண்டாய்க் காட்டப்பட்டதுமான காணி; இதற்கெல்லைகளாவன: வடக்கும் கிழக்கும் தெற்கும்-103,302 ம் உரிமைப்படத்தின் பகுதியில் கண்டிருக்கும் காணி ; மேற்கு-நீர்கொழும்பிலிருந்து குருநாக்கலுக்குப்போகும் ரோட்டு.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 1111 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

Kurunegala S. O. 82—1910.

Uva Notice No. 3,924.

இதன்பின் சொல்லப்படும் காணிகளின்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடமைதயாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1910 ம் வருஷம் (நவம்பர்) கார்த்திகை மீ 11 ந் திகதி, அவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்தின விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவின் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடமைதயைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டான அதிகாரத்தைக் கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவின்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சட்டிய காணிகளின் விவரம்.

ஊவா மாகாணம் உடுகிந்தைப்பகுதியில் மகாப்பலாத்தைக்கோறளையைச்சேர்ந்த கதுருகமுவ என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, பின்குறிக்கும் காணித்துண்டுகள்:

I.—பிரதமபடம் 114.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | .. | றெதிகேகேனேபத்தன (பேயர் இருந்த கூடாரம்) | | .. | .. | 10 | 0 | 14 |
| 2 | .. | தளாவைவத்தேபத்தன ( | ஷை ) | .. | .. | 5 | 1 | 34 |
| 3 | .. | டியத்தளாவேஉல்பொத்த ( | ஷை ) | .. | .. | 38 | 2 | 17 |
| 3½ | .. | ஷை ( | ஷை ) | .. | .. | 2 | 3 | 12 |
| 4 | .. | ஷை ( | ஷை ) | .. | .. | 2 | 3 | 6 |
| 5 | .. | கட்டவலதென்னே உல்பொத்த ( | ஷை ) | .. | .. | 3 | 1 | 37 |
| 6 | .. | கொகொலானேபத்தன ( | ஷை ) | .. | .. | 5 | 0 | 6 |
| 7 | .. | கொகொலானேவெவ ( | ஷை ) | .. | .. | 2 | 0 | 31 |
| 9 | .. | டியத்தளாவேபத்தன ( | ஷை ) | .. | .. | 260 | 0 | 0 |
| 9A | .. | உமங்கத்தெறபத்தன ( | ஷை ) | .. | .. | 0 | 0 | 33 |
| 9B | .. | ஷை ( | ஷை ) | .. | .. | 0 | 0 | 21 |
| 9½ | .. | தளாவலத்தேபத்தன ( | ஷை ) | .. | .. | 2 | 0 | 22 |
| | | | | | | 332 | 3 | 33 |

எல்லைகளாவன: வடக்கு-எல்ல என்னும் கிராமஎல்லை; கிழக்கு-ககொல்ல கிராமஎல்லை; தெற்கு-161,268 ம் உரிமைப்படத்தின் பகுதியில் கண்டிருக்கும் காணி, முடி உரித்துப்பேசும் உமங்கத்துறபத்தன, முடி உரித்துப்பேசும் கிரிமடுவேபத்தன; மேற்கு-முடி உரித்துப்பேசும் கிரிமடுவேபத்தன, அதுத்வெலக் கிராமஎல்லை, வெல்கொல்லேகந்துறஆறு.

II.—பிரதமபடம் 114.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 11 | .. | கிரிமடுவெபத்தன (பேயர்இருந்த கூடாரம்) | .. | .. | 0 | 3 | 20 |

எல்லைகளாவன: வடக்கு-ககொல்லக் கிராமஎல்லை, ஓர் ரோட்டு; கிழக்கு-ஓர் ரோட்டு; தெற்கு-முடி உரித்துப்பேசும் டியத்தளாவபத்தன; மேற்கு-161,268 ம் உரிமைப்படத்தின் பகுதியில் கண்டிருக்கும் காணி.

*இங்கிலீசின் நான்காம் பாகம் 1111 & 1112 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்க.

Uva S. O. 12—1910.

---

Matara Notice No. 3,925.

இதன்பின் சொல்லப்படும் காணிக்கு ஏதும் உரித்துச்சொல்லுகிறவர்கள் யாருமிருப்பாராகில், அவர்கள் 1910 ம் ஆண்டு நொவெம்பர்மாதம் 11 ந் திகதி அவக்கம் மூன்றுமாசத் தவணைக்குள் மாத்துறைக் கச்சேரியிலவைத்து மாத்துறை டிஸ்திறிக்கின் உதவி ஏஜண்ட் துரை அவர்களின் முகதாவில் வெளிப்பட்டு மேற்சொல்லிய காணிக்கு அல்லது அதிலொருபாகத்துக்கு இருக்கும் உரித்தைச் சொல்லிற்றாவிட்டால் மேற்சொல்லிய உதவி ஏஜண்ட்துரை அவர்களால் அவர்களுக்கு, 1897 ம் 1899 ம் 1900 ம் 1903 ம் ஆண்டுகளின் வெண்காணி கட்டளைச்சட்டத்தால் கொடுத்திருக்கும் அதிகாரத்தின் பிரகாரம் உரித்துச் சொல்லாமல்விட்ட மேற்சொல்லிய காணியை அரசாட்சியாரின் காணியென்று அவர்களின் கையொப்பமுள்ள எழுத்தால் கூறப்படுமென்பதை இதனால் அறிந்துகொள்ள வேண்டும்.

டபிள்யு. எல். கின்டர்ஸ்லி,
உதவி அரசாட்சி ஏஜண்ட்.

---

காணியின் விவரம்.

தென் மாகாணம் மாத்துறை டிஸ்திறிக்கு மொறவக்கோறளையைச்சேர்ந்த, ஊறுபொக்கை யென்னும் கிராமத்திலிருக்கும் இத்துடனிணைக்கப்படும் உறுதிப்படுத்திய படப்பிரதியில் காணும் 3 ஏக். 5 பேர்சஸ் விசாலமுள்ள சதாரணமாய் ரோட் றிசேர் வேசன் என்று சொல்லப்படும் பிரதமபடம் 23 ல் காணும் 50 B ம் காணித்துண்டின் எல்லைகளாவன: வடக்கு-வெண்ணிலச் சட்டங்களால் முடிக்குரிய கிதளேகேனையும்; கிழக்கு-கொமபா 166,709 ம் பிளான் கடதாசியில் காணும் காணி; தெற்கு-ஏ. என். அபேவிக்கிறமவும் மற்றவரும் உரித்துச்சொல்லுகிற தகனேகும்புற; மேற்கு-ஊறுபொக்கையிலிருந்து மூளடியனவுக்குப்போகும் டிஸ்திறிக் ரோட்கொம்மிட்டிக்கு உடைய வழி.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 1112 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[Supreme Court Criminal Session at Kandy, Kandy District.]

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிரீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கண்டி சுப்பிரீங் கோர்டு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங் கோட்டாரால் கண்டி டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1910 ம் ஆண்டு மார்கழிமாதம் 1 ந் திகதியாகிய வியாளக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.—

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

இங்ஙனம்,
எல். டபிள்யு. பூத்,
பிஸ்கால்.

கண்டி பிஸ்கால் கந்தோர்,
1910 ம் ஆடு கார்த்திகைமீ 1 ந் உ.

---

[Supreme Court Criminal Session at Kandy, Kegalla–Avisawella District.]

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிரீங்கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கண்டி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங்கோட்டாரால் கேகள்ள–அவிசாவெல்லை டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1910 ம் ஆண்டு மார்கழிமாதம் 1 ந் திகதியாகிய வியாளக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.—

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
ஜீ. கூக்சென்,
பிஸ்கால்.

இரத்தினபுரி பிஸ்கால் கந்தோர்,
1910 ம் ஆடு கார்த்திகைமீ 3 ந் உ.

---

[Supreme Court Criminal Session at Kandy, Kurunegala District.]

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிரீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கண்டி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங்கோட்டாரால் குருநாகல் டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1910 ம் ஆண்டு மார்கழிமாதம் 1 ந் திகதியாகிய வியாளக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.—

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
என். டி. மைற்சிங்க,
பிஸ்காலுக்காக.

குருநாகல் பிஸ்கால் கந்தோர்,
1910 ம் ஆடு கார்த்திகைமீ 7 ந் உ.

---

[Election of Unofficial Members, Local Board, Ratnapura.]

சுதேச சவுக்கிய தேர்ச்சிச் சங்கத்தைப்பற்றிய 1898 ம் ஆடு 13 ம் கட்டளைச்சட்டத்தின் 11 ம் 12 ம் பிரிவின் வரைவுப் பாட்டின் பிரகாரம் றெட்னபுரி பட்டணத்தின் சவுக்கிய தேர்ச்சிச் சங்கத்திற்கு அரசாட்சியார் பணிவிடையில்லாத அங்கத்தவர்கள் மூன்று பேர்களைத் தெரிந்து அவர்கள் 1911 ம் ஆடு தைமாதம் 1 ந் தேதி துவக்கம் 1912 ம் ஆடு மார்கழிமாதம் 31 ந் தேதி வரைக்கு இரண்டுவருட காலத்துக்கு உத்தியோகஞ்செய்யும்படி நியமிக்கும் பொருட்டு றெட்னபுரி பட்டணசாலையில் 1911 ம் ஆடு மார்கழிமாதம் 13 ந் திகதியாகிய செய்வாய்க்கிழமை பின்னேரம் 1·30 மணி வரையில் ஓர் சபை கூட்டப்படுமென்று இத்தால் அறிவிக்கிறேன்.

ஜீ. கூக்சென்,
அரசாட்சி ஏசன்றுத்துரை.

றெட்னபுரி கச்சேரி,
1910 ம் ஆடு நொவம்பர்மீ 2 ந் உ.

---

[Election of Unofficial Members, Local Board, Minuwangoda.]

1898 ம் வருஷத்தின் 13 ம் கட்டளைச்சட்டமாகிய சவுக்கிய சீர்திருத்தல் சங்கத்தைப்பற்றிய கட்டளைச்சட்டத்தின் 13 ம் பிரிவின் பிரகாரம் மினுமாங்கொடை சவுக்கிய சங்கத்தின் 1911 ம் ஆண்டு ஜனவரிமாதம் 1 ந் திகதி துவக்கம் 1912 ம் ஆண்டு டிசம்பர்மாதம் 31 ந் திகதி வரையில் அரசாட்சி உத்தியோகமில்லாத அங்கத்தவர்களைத் தெரிந்துகொள்வதற்கு 1910 ம் வருஷம் டிசம்பர்மாதம் 5 ந் திகதி காலமே 11 மணிக்கு மினுமாங்கொடை நகரசாலையில் ஒரு கூட்டம்வைக்க எண்ணியிருக்கிறேன் என்று இத்தால் தெரிவிக்கிறேன்.

ஸீ. டீ. வைகேர்ஸ்,
கவண்மேந்து ஏசன்று.

கொழும்பு கச்சேரி,
1910 ம் ஆண்டு கார்த்திகைமீ 1 ந் உ.

H. C. COTTLE GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.